**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – 2016 யூன்**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 யூன் மாதச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 963 | 27187 |
| கையெழுத்துப் பிரதிகள் | 5 | 388 |
| அழைப்பிதழ்கள் | 49 | 142 |
| தரமேம்படுத்தல்கள் | 74 | 4446 |
| பக்கம் தவறிய/ சிதைந்த ஆவணங்கள் | 17 | 1146 |
| மொத்தம் | 1108 | 33,309 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 442 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 30 தரமேம்படுத்தல் ஆவணங்களும் வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி ஆவணங்கள் ஜூலை மாத முதல் கிழமைகளில் பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஆவணங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பக்கங்கள் தவறிய, சிதைந்த ஆவணங்களும் மின்வருடப்பட்டன

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 60 இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் மற்றும் சேகரிப்பாளர்களான தெணியான், கணேசராஜா, செல்வமனோகரன், புவனேஸ்வரி, சட்டநாதன், திருமதி கொன்ஸ்ரைன், கா.சிவபாலன், து.பிரதீபன் ஆகியோரின் சேகரிப்புக்களும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வெளியீடுகளும் மின்வருடப்பட்டுள்ளது.

- யாழ் பொது நூலகம் தமது சேகரிப்பில் உள்ள பத்திரிகைகளை எண்ணிம ஆவணவாக்குவதற்கு விருப்பம் தெரிவித்த நிலையில் இம்மாதம் யாழ் பொது நூலகத்தில் வைத்து பத்திரிகைகள் ஆவணவாக்கப்பட்டுள்ளன.

வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

ஜூன் மாதத்தில் 06 எழுத்தாளர்களும் 02 வெளியீட்டாளர்களும் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- **வெளியீட்டாளர்கள்**
    - இது நம் தேசம் வெளியீட்டகம்
    - மலைமுரசு

- எழுத்தாளர்கள்
    - து.பிரதீபன்
    - செ.மோகநாதன்
    - ச.ராகவன்
    - கா.சிவபாலன்
    - கா.தவபாலச்சந்திரன்
    - ரா.ஸ்ரீஞானேஸ்வரன்

**புதிய ஊழியர்கள் உள்வாங்கள்**

- மின்வருடல் செயற்பாட்டிற்காக இம்மாதம் மூன்று ஊழியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். இதில் ஐந்து ஊழியர்கள் மின்வருடல் செயற்பாட்டிற்காகவும் மூன்று ஊழியர்கள் மின்வருடியவற்றை இறுதிபடுத்தும் செயற்பாட்டிற்காகவும் ஈடுபட்டனர்.

**வரவு செலவு அறிக்கை**

- யூன் மாதத் தேவைகளுக்காக ரூ. 377,421.87 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 284,590, உபகரணச் செலவுகள் 27,250, வாடகை 21,101, மின்சாரம் 7,245, தொலைபேசி, இணையத்திற்கான செலவாக 12,636.87 மற்றும் ஏனைய செலவுகள் 24,599 ஆகியன உள்ளடங்குகின்றன.

- யூன் மாதம் இலங்கையில் இருந்து 3000 ரூபாவும் அவுஸ்திரேலியா பங்களிப்பினால் 66,000 ரூபாவும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.